# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF Judicial Magistrate No.1 Court, Sivakasi
## CC No. 82/2023

Deposition of the witness for Prosecution **PW6**

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. கருத்த பாண்டி** |
| Father's/Husband's Name | : | **சுந்தர்ராஜன்** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (05.05.2026)

(எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

1. நான் தற்போது சென்னை அண்ணா சாலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சிவகாசி நகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது அங்கு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த மாரிமுத்து என்பவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். அவர் தற்போது பணியிட மாறுதல் பெற்று சென்று விட்டதால் அவர் தொடர்பாகவும் வழக்கு ஆவணங்களின்படி சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 30.01.2023 ஆம் தேதி காலை 16.30 மணிக்கு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் மாரிமுத்து பணியில் இருந்த போது ஜெயலட்சுமி என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நிலைய குற்ற எண்.40/2023 வழக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் வழக்கு கோப்பை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 17.00 மணிக்கு சிவகாசி அம்பேத்கர் சிலை பக்கம் உள்ள சூர்யா டீக்கடை அருகில் சென்று வழக்கின் முதல் சம்பவ இடமாக உள்ள இடத்தை சாட்சிகள் ஜெகதீசன் மற்றும் சங்கரநாராயணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேலும் அன்றைய தினம் 17:30 மணிக்கு சிவகாசி விசுவநத்தம் சண்முகா ஸ்கூல் பின்புறம் உள்ள மற்றொரு சம்பவ இடத்தை சாட்சிகள் ஸ்ரீனிவாசன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. பின்னர் அன்றைய தினமே இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 மற்றும் வழக்கு பதிவு செய்த சிறப்பு ஆய்வாளர் மாரிமுத்து ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி எனது விசாரணையில் 30.01.2023 ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு சிவகாசி அம்பேத்கர் சிலை அருகே கொத்தனார் வேலைக்கு செல்வதற்கு சுப்பிரமணி நின்று கொண்டிருந்தபோது அந்த இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி சந்திரபோஸும் அவருடன் கார்த்தி என்பவரும் வந்து சுப்பிரமணியை பார்த்து வண்டியில் ஏறு எனச் சொன்னபோது ஏன் என்னை வண்டியில் ஏறச் சொல்லுகிறீர்கள் என சுப்பிரமணி கேட்டபோது ஒழுங்கா வண்டியில் உட்காரு என அவர்கள் சொல்லி கட்டாயப்படுத்தி சுப்பிரமணியை வண்டியில் ஏற்றி உட்கார வைத்துக் கொண்டு விஷ்வநத்தம் சண்முகா ஸ்கூல் பின்புறம் கொண்டு இறக்கி விட்டார்கள். அவர்களுடன் மற்றொரு பல்சர் பைக்கில் எதிரிகள் சக்திவேல் மற்றும் நாகராஜ் ஆகிய இருவரும் உடன் வந்தார்கள் என்பதும் எனது விசாரணையில் தெரிந்தது.

5. மேலும் எதிரிகள் சுப்பிரமணியை அப்படி இறக்கி விட்டதும் அப்போது எதிரி சந்திர போஸ் என்பவர் சுப்பிரமணியை பார்த்து ஏன்டா தேவிடியா மகனே, எங்க அப்பாவை எதிர்த்து பேசுகிறாய், இனிமே எதிர்த்து பேசுவியாடா கூதி மகனே என்று சொல்லி அருகில் கிடந்த பனைமரம் மட்டை மற்றும் கம்பை எடுத்து அடித்ததில் சுப்பிரமணிக்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது என்றும், மற்ற மூன்று எதிரிகளும் அசிங்கமாக பேசி மாறி மாறி சுப்பிரமணியை கையாலும் காலாலும் அடித்து மிதித்து, கட்டையால் அடித்தும் வீக்க காயத்தை ஏற்படுத்தி உள்ளார்கள். மேலும் மேற்படி சுப்பிரமணியை பார்த்து எதிரிகள் இனிமேல் ஊரில் பிரச்சனை செய்தால் அடித்தே கொன்று விடுவோம் என்று மட்டை மற்றும் கம்பை வைத்து மிரட்டினார்கள் என்றும் எனது விசாரணையில் தெரிந்தது.

6. மேற்படி விசாரணையில் தெரிய வந்த விபரங்களின் அடிப்படையில் இந்த வழக்கின் சட்ட பிரிவுகளை இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324, 323, 365, 506(ii) ஆக பிரிவு மாறுதல் செய்து சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அதன் பின்பு இந்த வழக்கின் எதிரிகள் நான்கு பேரையும் தேடி வந்த நிலையில் மூன்றாவது எதிரி சக்திவேல் என்பவர் சிவகாசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் சென்று விட்டார். மற்ற எதிரிகள் மூன்று பேரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளார்கள். அதனால் அவர்களை கைது செய்யவில்லை.

7. மேலும் இந்த வழக்கில் காயம் பட்ட சுப்பிரமணி என்பவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் லட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் மற்றும் விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்றிதழ் பெற்றுள்ளேன். மேலும் இந்த வழக்கின் எதிரி சந்திரபோஸ் என்பவருக்கு அழைப்பாணை சார்பு செய்து 18.03.2023 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு காவல் நிலையத்தில் ஆஜர் ஆனவரை விசாரித்து 18.00 மணியளவில் அவர் ஆஜர்

படுத்திய வழக்கு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தை படிவம் 91 மூலம் கைப்பற்றினேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கு சொத்து எண்.33/2023 பெற்றேன். அத்துடன் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

8. விபத்து பதிவேட்டில் சிவகாசி அரசு மருத்துவமனையில் 12.50 மணிக்கு சுப்பிரமணி என்பவர் சிகிச்சைக்கு சேர்ந்த போது உடனே காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 12.50 மணிக்கு அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதற்கு பின்னர் காவல் நிலையத்தில் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விபத்து பதிவேட்டில் 12.50 மணிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக ஆம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். விபத்து பதிவேட்டில் சுப்பிரமணி என்பவர் கத்தியால் தாக்கியதாக தெரிவித்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லும் விஸ்வநத்தம் பகுதியில் ஆட்கள் நடமாட்டம் இருந்ததாகவோ, குடியிருப்பு பகுதிகள் இருந்ததாகவோ, கடைகள் இருந்ததாகவோ குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் அது Outer Place ஆகும். அதில் தொடர்ச்சியாக இருந்ததாகத்தான் காட்டப்படவில்லை.

9. மருத்துவமனையில் இருந்து 12.50 மணிக்கு தகவல் கிடைத்த பின்னர் போலீசார் யாரும் மருத்துவமனைக்கு சென்று சுப்பிரமணியிடம் இருந்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். சுப்பிரமணி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட போது சுயநினைவுடன் இருந்ததாகத்தான் விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்

சரிதான். புகார் மனுவில் எத்தனை மணிக்கு எதிரிகள் விசுவநத்தத்தில் தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் முதல் சம்பவ இடத்திலிருந்து 07.00 மணிக்கு கூட்டிக் கொண்டு போனதாக தெரிவித்துள்ளார். ஆனால் இரண்டாவது சம்பவ இடத்தில் சம்பவம் நடந்த நேரம் தெரிவிக்கவில்லை இருப்பினும் எனது விசாரணையில் அவ்வாறு சம்பவம் நடந்தது காலை 08.00 மணி முதல் 08.30 மணி போல் இருக்கும் என தெரிந்தது.

10. உங்களது விசாரணையின் போது சாட்சிகள் யாராவது காலை 08.00 மணி முதல் 08.30 மணி வரை சம்பவம் நடந்தது என கூறியுள்ளார்களா என்றால் இல்லை. புகார் மனுவில் ஜெயலட்சுமி அவரது கணவர் சொல்லி தான் தகவல் தெரிந்து புகார் கொடுப்பதாக குறிப்பிட்டு புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆனால் எனது விசாரணையில் கூறியுள்ளார். புகார் மனுவில் எதிரிகள் யார் யார் எந்த ஆயுதத்தை வைத்து உடலின் எந்த பகுதியில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆனால் எனது விசாரணையில் தெரிவித்துள்ளார்கள். அசிங்கமான வார்த்தைகள் பேசப்பட்டதாக குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. புகார் மனுவில் சுப்பிரமணி என்பவருக்கு எந்தெந்த இடத்தில் காயம் இருந்தது என்றும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் யாருடைய வண்டியில் சுப்பிரமணியை ஏற்றி வந்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எத்தனை இருசக்கர வாகனங்களில் வந்து கூட்டிக்கொண்டு போனார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை புகாரில் சொல்லவில்லை. ஆனால் எனது விசாரணையில் கூறியுள்ளார்கள். காயம் பட்ட சுப்பிரமணி என்பவரை எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தீர்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து அன்றைய தினமே இரவு 11.00 மணி போல் விசாரித்தேன்.

12. புகார் கொடுக்கப்பட்டு சுமார் 4 மணி நேரம் கழித்து தான் நீங்கள் காயம்பட்டதாக சொல்லும் சுப்பிரமணியை விசாரித்துள்ளீர்கள் என்றால் ஆமாம். சுப்ரமணி என்பவரை விசாரித்து நீங்கள் பதிவு செய்த வாக்குமூலத்தில் அவரை மருத்துவமனையில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. காயம் பட்ட சுப்பிரமணி விஸ்வநத்தத்திலிருந்து வரும் போது அருகில் உள்ள நபர் யாரிடமாவது சொன்னாரா என நீங்கள் விசாரித்தீர்களா என்றால் அவர் நேரடியாக வீட்டிற்கு சென்று தான் கூறியுள்ளார் என எனது விசாரணையில் தெரிந்தது. புகார் மனுவில் ஜெயலட்சுமி அவரது கணவர் வீட்டிற்கு வந்து சொன்னார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் இல்லை.

13. நீங்கள் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கையை பிழையாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் கொடுத்த ஜெயலட்சுமி என்பவரை புகார் கொடுத்த பின்னர் எவ்வளவு நேரம் கழித்து விசாரித்தீர்கள் என்றால் புகார் தரப்பட்ட ஒரு மணி நேரத்திலேயே அவரை விசாரித்துள்ளேன். எதிரிகள் மீது முன் விரோதத்தின் அடிப்படையில் போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me through Teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Location: JM No.1 Court, Sivakasi.
Date: 2026.05.05 15:31:49 +0530

Judicial Magistrate No.1,
Sivakasi.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF Judicial Magistrate No.1 Court, Sivakasi
## CC No. 82/2023

Deposition of the witness for Prosecution **PW5**

| | | |
|---|---|---|
| Name | : | **திருமதி. லட்சுமி, மருத்துவர்** |
| Husband's Name | : | **மணிகண்டன்** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (05.05.2026)

(எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது திருவனந்தபுரம் சாந்தனா தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சிவகாசி அரசு மருத்துவமனையில் கடந்த 30.01.2023 ஆம் தேதி பணியில் இருந்த போது அன்றைய தினம் மதியம் 12:50 மணி அளவில் சுமார் 31 வயதுடைய சுப்பிரமணி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவரது தகப்பனார் பெயர் ஈஸ்வரன் ஆகும். அவரை அவருடைய மாமனார் ஜெயராஜ் என்பவர் அழைத்து வந்தார். நான் மேற்படி சுப்பிரமணி என்பவரை பரிசோதனை செய்தபோது அவர் சுய நினைவுடன் காணப்பட்டார் மேலும் அவர் தன்னை அடையாளம் தெரிந்த நான்கு நபர்கள் விஸ்வநத்தம் அருகில் சண்முகா பள்ளிக்கூடத்திற்கு பின்புறம் பாரத் சிலிண்டர் அருகே 30.01.2023 ஆம் தேதி காலை 08.00 மணி அளவில் பனை மட்டை மற்றும் கத்தி ஆகியவற்றை கொண்டு தாக்கியதாக தெரிவித்தார்.

2. நான் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது அவரது இடது பக்கத்தில் பக்கவாட்டில் 3x1 சென்டிமீட்டர் அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. வலது

முன்னங்கையில் வலியும் வீக்கமும் காணப்பட்டது இடது முன்னங்கை மற்றும் மணிக்கட்டுப் பகுதியில் வலியும் வீக்கமும் காணப்பட்டது. இரண்டு கைகளையும் நீட்டவும் மடக்கவும் முடியவில்லை என்று தெரிவித்தார். இடது கால் பகுதியில் 2x2 சென்டிமீட்டர் அளவிலும் 1x1 சென்டிமீட்டர் அளவிலும் பல சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது. அவரது வலது பக்க முகத்தில் 1x2 சென்டிமீட்டர் அளவில் சிராய்ப்புடன் கூடிய கன்றிய காயம் காணப்பட்டது.

3. அவரை மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். (**மேற்படி நபருக்கு பதிவு செய்யப்பட்ட விபத்து பதிவேடுடன் கூடிய காயச் சான்று கருத்துரை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4. காயம்பட்ட நபருக்கு மருத்துவமனையில் சிகிச்சை வழங்கும் போது காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் ஆமாம் தகவல் தெரிவிக்கப்பட்டது. எவ்வளவு நேரத்தில் காவலர்கள் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்று தெரியுமா என்றால் சரியாக நேரம் சொல்ல தெரியவில்லை. ஆனால் போலீசார் வந்தார்கள். போலீசார் மருத்துவமனைக்கு வந்து காயம் பட்ட நபரை விசாரித்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

Taken down by me / before me through Teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Location: JM No.1 Court, Sivakasi.
Date: 2026.05.05 15:31:56 +0530

Judicial Magistrate No.1,
Sivakasi.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF Judicial Magistrate No.1 Court, Sivakasi**
**CC No. 82/2023**

Deposition of the witness for Prosecution **PW4**

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. சீனிவாசன்** |
| Father's/Husband's Name | : | **கோவிந்தசாமி** |
| Age | : | |
| Village and Taluk | : | |
| Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (05.05.2026)

(எதிரிகள் வழக்கறிஞருடன் ஆஜர்.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் விஸ்வநத்தம் ஊரில் குடியிருந்து வருகிறேன். சண்முகா ஸ்கூல் பக்கத்தில் டீக்கடை வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். எனது கடைக்கு 100 மீட்டர் பக்கத்தில் சண்டை நடந்தது. அதை போலீசார் அந்த இடத்திற்கு வந்து பார்த்து மார்க் செய்து அதில் கையொப்பம் போடச் சொன்னார்கள். அதற்காக மேற்படி கையொப்பத்தை போட்டு கொடுத்தேன். (**மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

2. சண்முகா ஸ்கூலில் இருந்து எனது டீக்கடை சுமார் 100 மீட்டர் தூரத்திற்குள் இருக்கும். பக்கத்தில் இந்த வழக்கு சம்பவ சமயத்தில் வேறு கடைகள் கிடையாது ஆனால் தற்போது கடைகள் வந்துள்ளது. போலீசார் வந்து கையொப்பம் வாங்கும் போது நீங்கள் டீக்கடையில் தான் இருந்தீர்கள் என்றால் ஆமாம். டீக்கடையில் வைத்து தான் போலீசார் உங்களிடம் கையொப்பம்

வாங்கினார்கள் என்றால் ஆமாம். கையொப்பம் வாங்கியதும் போலீசார் கடையிலிருந்து போய் விட்டார்கள் என்றால் ஆமாம். நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் நீங்கள் சொன்ன நாள் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு அதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM

Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Location: JM No.1 Court, Sivakasi.
Date: 2026.05.05 15:32:03 +0530

Judicial Magistrate No.1,
Sivakasi.